IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.517/2019

DEPOSITION OF WITNESS P.W.3

| | | |
|---|---|---|
| NAME | : | KOTHANDARAMAN |
| FATHER'S NAME | : | MURUGESAN |
| VILLAGE | : | GUDIYATHAM |
| OCCUPATION | : | SSI |
| AGE | : | 53 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 04th day of JULY 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது குடியாத்தம் கிராமிய காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். எங்கள் காவல் நிலையத்தில் கடந்த 2015ஆம் வருடம் காவல் ஆயவாளராக திருமதி.சாந்தி அவர்கள் பணிசெய்த விவரம் எனக்கு தெரியும். அவர்கள் தற்போது பணிமாறுதலில் சென்றுவிட்டதாலும், அவர்களுடைய கையொப்பம் எனக்கு பரிட்சயம் என்பதாலும், நான் ஆவணங்களின் அடிப்படையில் கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 05,07.2015ம் அன்று பகல் 01.00 மணியளவில் ஆய்வாளர் நிலைய பொறுப்பில் இருந்தபோது காந்தராஜ் த–பெ மகாலிங்கம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று அதன் தன்மை நிலைய குற்ற எண்.267/2015 இதச பிரிவுகள் 279, 304 (A) என முதல் தகவல் அறிக்கை பதிவு அதன் அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனுவை இணைத்து கணம் நீதிமன்றத்துக்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை மேலதிகாரிகளின் பார்வைக்கு வைத்தும், விசாரணை நகலை அவரது விசாரணைக்கு எடுத்துக்கொண்டார்.

அன்றைய தினமே பகல் 02.00 மணிக்கு சம்பவ இடம் சென்று விசாரணை செய்து சாட்சிகள் காசி மற்றும் சுரேந்தராவ் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து மேற்படி சாட்சிகளின் கையொப்பம் பெற்றார். அன்றைய தினமே மதியம் 02.00 மணிளயவில் வேலூர் அரசு மருத்துவமனை சவகிடங்கு அருகே இறந்த மகாதேவன் என்பவரது பிரேத்தின் மீது பிரேதவிசாரணை செய்து பஞ்சாயத்தாரிடம் கையொப்பம் பெற்றார். பின்பு மேற்படி பிரேதத்தை காவலர் H.C. 798 திரு.செந்தில்குமார் என்பவரிடம் வேண்டுகோள் கடிதம் கொடுத்து பிரேத பரிசோதனைக்காக மருத்துவர். நாகேந்திகுமார் என்பவர் வசம் ஒப்படைத்தார்.

பின்னர் சாட்சிகள் காந்தராஜ், கோவிந்தன், பாலாஜி, ஜெயராமன், ரமேஷ், காசி மற்றும் சுரேந்திரன் ஆகியோரை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலங்களை பதிவு செய்தார். சாட்சிகளின் விசாரணையில் இருந்து சம்பவம் உண்மை என்று தெரியவந்ததால் எதிரியைத் தேடி வந்த நிலையில் எதிரியை கடந்த 09.07.2015 அன்று மதியம் 02.00 மணிக்கு எதிரி சீத்தாபதி என்பவரை காணரம் கைது செய்து நிலையம் அழைத்து வந்து தக்க பிணையம் பெற்று ஜாமீனில் விடுதலை செய்தார்.

பின்பு விபத்தை ஏற்படுத்திய இருசக்கர வாகனமாக TN 23 BK 9639 என்ற TVS Scooty Pep என்ற வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வுக்காக கருணாநிதி மோட்டார் வாகன ஆய்வாளர் வசம் ஒப்படைத்தார். விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் மோட்டார்வாகன ஆய்வறிக்கை பெற்று மோட்டார் வாகன ஆய்வாளர் கருணாநிதி என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். மேலும் பிரேத பரிசோதனை செய்த மருத்துவர். நாகேந்திரகுமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரத பரிசோதனை அறிக்கை பெற்றார். மேற்படி வேண்டுகோள் கடிதம் பெற்ற செந்தில்குமார் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

புகார் மனு அ.சா.ஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும் பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.6 ஆகவும், பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.7 ஆகவும், மோட்டார் வாகன சான்று அ.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. இத்துடன் அவரது புலன் விசாரணை முடித்து எதிரி மீது மேலே கண்ட பிரிவுகளின் கீழ் குற்ற அறிக்கையை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நான் சொன்னபடி வழக்கு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. சொன்னபடி சொன்ன நேரத்தில் வாக்குமூலம் பெற்று வழக்கு பதிவு செய்யவில்லை என்றாலும் சம்பவ இடம் சென்று பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யாமல் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. இவ்வழக்கில் நான் சொன்னபடி வழக்கு சொத்து கைப்பற்றப்படவில்லை என்றாலும், சொன்னபடி சொன்னவிதத்தில் எதிரி கைது செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமில்லை என்றாலும் சரியல்ல.

Sd/–R.Saranya.,
Judicial Magistrate,
Gudiyatham.